Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 75 /2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -8

| | | | |
|---|---|---|---|
| Name: | மோகன்தாஸ் | Calling: | உதவி ஆய்வாளர், ஓய்வு |
| Father's Name: | பொன்னுசாமி | Religion: | |
| Village: | ஜோலார்பேட்டை | Age: | 66 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.02.2026 நேரம் : 01.30 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

அ.சா.8 முதன்மை விசாரணை

நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 2017 ம் தேதி ஓய்வு பெற்றேன். கடந்த 2015 ம் வருடம் திம்மாம்பேட்டை காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது குற்ற வழக்கு எண். 8/2015 பிரிவு 457,380 இதச என்ற வழக்கில் உதவி ஆய்வாளர் திரு. சேகர் என்பவர் முதல் கட்ட புலன் விசாரணையை முடித்து எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணை மேற்கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டதில் ஏற்கனவே அவர் தயாரித்திருந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் போலவே இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. அவர் விசாரித்த சாட்சிகளை நான்விசாரித்த போது ஏற்கனவே அவரிடம் சொன்னது போலவே இருந்ததால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. 08.04.2015 ம் தேதி நாட்றம்பள்ளி காவல் நிலைய குற்ற வழக்கு எண் 119/2015 பிரிவு 394 இதச வழக்கில்

நாட்றம்பள்ளி காவல் ஆய்வாளர் திரு. பழனி என்பவர் புலன் விசாரணை செய்ததில் எதிரி முருகன் என்கிற கானாமுருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் திம்மாம்பேட்டை காவல் நிலைய சரகம் நாராயணபுரம், நாகாலம்மன் கோவிலில் திருடு போன உண்டியல் பணம் 1500, பழைய ஆம்ப்ளி பையர் ஆகியவற்றையும் திருடியதாக தெரியவந்தது என தெரிந்துக்கொண்டேன். 15.10.2015 ம் தேதி திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண். 10/2015 சட்டப்பிரிவு 457,380 இதச என்ற வழக்கிலும் சம்மந்தப்பட்ட எதிரி முருகன் என்கின்ற கானாமுருகன் மற்ற வழக்குகளில் மத்திய சிறையில் இருந்ததால் இவ்வழக்கில் சம்பிரதாய கைது செய்வதற்கு ஆணவம் செய்து நீதிமன்றத்தில் சமர்பித்தேன்.

இவ்வழக்கில் புகார்தாரர் ஆன சாட்சி கிருஷ்ணனை இவ்வழக்கின் எதிரியை பிடித்து விட்டது குறித்தும் வழக்கு சொத்தான பணத்தை எதிரி செலவழித்து விட்டார் என்பதை தெரிவிப்பதற்காகவும் மீண்டும் வரவைத்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி முருகன் என்கிற கானாமுருகனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த ஆய்வாளர் திரு. பழனி என்பவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலத்தின் சான்றிட்ட உண்மை நகலையும், ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகளாக கையொப்பமிட்ட முருகன் த/பெ செல்வம், நேரு ஆகிய இருவரின் குமுவிச 161(3) சான்றிட்ட நகலையும் பெற்றேன்.

இவ்வழக்கில் திருடப்பட்ட உண்டியல் பணத்தை எதிரி செலவு செய்துவிட்டேன் என்று கூறியதால் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்ய இயலவில்லை. சம்பவம் நிகழ்ந்தது உண்மை என தெரியவந்ததால் அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 457,380 இதச படிக்கு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன். நான் விசாரித்த போது சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) வாக்குமூலத்தில் உள்ளது போலவே தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

புகார் மனுவில் புகார் தாரர் காணாமல் போன ரூபாய் நோட்டுகள் 500 ரூபாய் தாள்களா 100 ரூபாய் தாள்களா என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆம்ப்ளி பையரின் நிறுவனத்தின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ப.சா.1 முதல் ப.சா. 4 வரை உள்ளவர்கள் புகார்தாரரின்

உறவினர்கள் என்றால் அதுக்குறித்து தெரியவில்லை. ப.சா.6 மற்றும் ப.சா.7 ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் என்றால் சரிதான். 05.01.2016 பதிவு செய்த வழக்குகளில் கையால் எழுதப்பட்ட வழக்கிற்கு கணினியில் தட்டச்சு செய்த தாளை இணைத்துள்ளீர்கள் என்றால் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் கொடுத்ததை நான் இனைத்துள்ளேன். இவ்வழக்கில் அ.சா.1 எந்த விதமான வழக்கு சொத்தையும் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றும் எதிரி யார் என்று தெரியாது என்றும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுக்குறித்து தெரியாது. அ.சா.2 மாணிக்கம்மாள் வழக்கின் விவரம் எனக்கு தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுக்குறித்து தெரியாது. பார்வை மகசர் மற்றும் வரைப்பட சாட்சிகள் வழக்கின் விவரம் எனக்கு தெரியாது என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுக்குறித்து தெரியாது. வழக்கு ஆவணங்கள், வழக்கு சொத்து அனைத்தும் காவல் நிலையத்திலே வைத்து தயாரித்து புள்ளியில் விவரத்திற்காக காவல் ஆய்வாளர் பழனி அவர்கள் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி கையொப்பம்
(ஓம்.) மோகன்தாஸ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.24 14:40:54 +0530